JMC, Thiruvadanai-CC No.215/2023
Judgment Dated: 30.06.2026

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாடானை.**

முன்னிலை : திரு.J.அன்டோனி ரிஷன்தேவ், B.B.A., L.L.B(Hons),
நீதித்துறை நடுவர்,
திருவாடானை

2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ம் நாள் செவ்வாய்க்கிழமை

**ஆண்டுப்பட்டியல் வழக்கு எண். 215/2023**

CNR No. TNRM-17001555-2023

| | | | |
|---|---|---|---|
| 1. | வரிசை எண். | : | C.C.No.215/2023 |
| 2. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | : | ஆர்.எஸ்.மங்களம் காவல் நிலையம் குற்ற எண். 168/2019 |
| **எதிரிகளின் விபரம்** | | | |
| 3. | பெயர் | : | சுதாகர் (A1) |
| 4. | த/பெ. | : | ஆரோக்கியசாமி |
| 5. | தொழில் | : | விவசாயம் |
| 6. | முகவரி | : | பெரியார் நகர், ஆர்.எஸ்.மங்களம் இராமநாதபுரம் மாவட்டம். |
| 7. | வயது | : | வயது 31/2019 |
| | பெயர் | : | ஆரோக்கியசாமி (A2) |
| | த/பெ. | : | அருளானந்து |
| | தொழில் | : | விவசாயம் |
| | முகவரி | : | பெரியார் நகர், ஆர்.எஸ்.மங்களம் இராமநாதபுரம் மாவட்டம். |
| | வயது | : | 56/2019 |
| | பெயர் | : | நேசசெல்வம்(A3) (இறப்பு) |
| | த/பெ. | : | அருளானந்து |
| | தொழில் | : | விவசாயம் |
| | முகவரி | : | பெரியார் நகர், ஆர்.எஸ்.மங்களம் இராமநாதபுரம் மாவட்டம். |
| | வயது | : | 51/2019 |
| | பெயர் | : | சேசுதுரை (A4) |
| | த/பெ. | : | அலங்காரம் |
| | தொழில் | : | விவசாயம் |
| | முகவரி | : | பெரியார் நகர், ஆர்.எஸ்.மங்களம் |

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.30 16:07:13 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | இராமநாதபுரம் மாவட்டம். |
| | வயது | : | 40/2019 |
| | பெயர் | : | பிரவீன் (A5) |
| | த/பெ. | : | நேசசெல்வம் |
| | தொழில் | : | விவசாயம் |
| | முகவரி | : | பெரியார் நகர், ஆர்.எஸ்.மங்களம்<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| | வயது | : | 20/2019 |
| | பெயர் | : | சுதர்சன் (A6) |
| | த/பெ. | : | ஆரோக்கியசாமி |
| | தொழில் | : | விவசாயம் |
| | முகவரி | : | பெரியார் நகர், ஆர்.எஸ்.மங்களம்<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| | வயது | : | 28/2019 |
| | பெயர் | : | பிரிட்டோ (A7) |
| | த/பெ. | : | மரியதாஸ் |
| | தொழில் | : | விவசாயம் |
| | முகவரி | : | பெரியார் நகர், ஆர்.எஸ்.மங்களம்<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| | வயது | : | 33/2019 |
| 8. | சம்பவ நாள் | : | 16.09.2019 ம் தேதி 16.00 மணி |
| 9. | புகார் தேதி | : | 17.09.2019 ம் தேதி 06.30 மணி |
| 10. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | : | 1 முதல் 4 எதிரிகள் 17.09.2019 ம் தேதி கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.<br><br>5 முதல் 7 எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் CRL.OP.(MD) No.13673 of 2019, நாள் 27.09.2019 உத்தரவின் படி முன்பிணை பெற்றுள்ளதால் கைது நடவடிக்கை மேற்கொள்ளப் படவில்லை. |
| 11. | எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 1 முதல் 4 எதிரிகள் 17.09.2019 ம் தேதி கைது செய்யப்பட்டு இந்நீதிமன்ற Crl.M.P.No. 3527/2019, Date 27.09.2019 உத்தரவின் படி |

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.30 16:07:18 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | பிணை பெற்று 27.09.2019 ம் தேதி ஜாமின்தாரர்களை நிறுத்தி பிணையில் சென்றுள்ளார்கள்.<br><br>5 முதல் 7 எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் CRL.OP.(MD) No.13673 of 2019, நாள் 27.09.2019 உத்தரவின் படி முன்பிணை பெற்று 18.10.2019 தேதி ஜாமின்தாரர்களை நிறுத்தி பிணையில் சென்றுள்ளார்கள். |
| 12. | கமிட்டல் உத்தரவு | : | இல்லை |
| 13. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | : | 08.02.2024 |
| 14. | விசாரணை முடிவுற்ற நாள் | : | 25.06.2026 |
| 15. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | : | 1 முதல் 4 வரை உள்ள எதிரிகள் மீது 147,148,294(b),323,324 IPC ன் கீழ், 5 முதல் 7 வரை உள்ள எதிரிகள் மீது 147,148,294(b),323,341,324,427,506(ii) IPC கீழ் |
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | 1 முதல் 4 வரை உள்ள எதிரிகள் மீது 147,148,294(b),323,324 IPC ன் கீழ், 5 முதல் 7 வரை உள்ள எதிரிகள் மீது 147,148,294(b),323,341,324,427,506(ii) IPC கீழ் |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் | : | –இல்லை– |
| 17. | அரசு தரப்பு சாட்சிகள் | : | அ.சா.1 – முதல் விசாரணை – 09.06.2026<br>குறுக்கு விசாரணை – 09.06.2026<br>அ.சா.2 – முதல் விசாரணை – 09.06.2026<br>குறுக்கு விசாரணை – 09.06.2026<br>அ.சா.3 – முதல் விசாரணை – 09.06.2026<br>குறுக்கு விசாரணை – 09.06.2026<br>அ.சா.4 – முதல் விசாரணை – 23.06.2026<br>குறுக்கு விசாரணை – 23.06.2026 |
| 18. | எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 25.06.2026 |
| 19. | எதிரிகள் தரப்பு சாட்சிகள் | : | இல்லை |
| 20. | எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச.311 பிரிவின்படியான மனுக்கள் | : | இல்லை |

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.30 16:07:23 +0530

| | | | |
|---|---|---|---|
| 21. | அரசு தரப்பு வழக்கறிஞர் | : | செல்வி.முத்துமாரி |
| 22. | எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | : | திரு.S.B.கண்ணன் |
| 23. | எதிரிகளின் கூற்று | : | 1.2,4 முதல் 7 எதிரிகள் குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள் |
| 24. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | : | 30.06.2026 |
| 25. | வழக்கின் முடிவு குறித்து எதிரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 30.06.2026 |
| 26. | நீதிபதியின் முடிவு | : | முடிவாக, 3 வது எதிரி வழக்கு விசாரணை துவங்குவதற்கு முன்பே இறந்துபோய் விட்டபடியால் அவர் மீதான குற்றச்சாட்டுகள் அபேட் ஆகிவிட்டது. 1,2,4 எதிரிகள் மீது 147,148,294(b),323,324 IPC ன் கீழ், 5 முதல் 7 வரை உள்ள எதிரிகள் மீது 147,148,294(b),323,341,324,427,506(ii) இந்திய தண்டனை சட்டத்தின் கீழ், குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, மேற்படி பிரிவுகளிலிருந்து 1,2,4 மற்றும் 5 முதல் 7 வரை உள்ள எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1,2,4 மற்றும் 5 முதல் 7 வரை உள்ள எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணையமுறி ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் P.R.56/2020 ல் கட்டுப்பட்டுள்ளதும், அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதுமான வழக்கு சொத்துகளான<br><br>Item No. I) மண்வெட்டி கனை சுமார் 59 சென்டி மீட்டர் உடன் கூடிய 18 சென்டி மீட்டர் நீளம் உள்ள மண்வெட்டியுடன் 19 சென்டி மீட்டர் சுற்றளவு கொண்ட இரும்பு பூனுடன் கூடிய மண்வெட்டி ஒன்று ,<br><br>Item No. II) சுமார் 81 சென்டி மீட்டர் நீளம் உள்ள கருவேல்கம்பு ஒன்று,<br><br>Item No. III) களைகொட்டு சுமார் 14 சென்டி மீட்டர் நீளமும், களைகொட்டு கனை கூமார் |

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.30 16:07:29 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | 51 சென்டி மீட்டர் உடன் கூடிய களைகொட்டு ஒன்று.<br><br>மேற்கண்ட வழக்கு சொத்துகள் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் உரிய வழிமுறைகளை பின்பற்றி அழித்தல் செய்ய உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு 19.04.2023ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தின் முன்பு 25.06.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, இவ்வழக்கின் 3வது எதிரி வழக்கு விசாரணை துவங்குவதற்கு முன்பே இறந்துபோய் விட்டபடியால் அவர் மீதான குற்றச்சாட்டுகள் அபேட் ஆகிவிட்ட நிலையில், அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 7 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.B.கண்ணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

1. <u>அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் சுருக்கம்:–</u>

இவ்வழக்கின் புகார்தாரர் வில்சன் ராபர்ட் என்பவருக்கும் அதே பெரியார் நகரைச் சேர்ந்த அருளானந்து மகன்களான 2 மற்றும் 3 எதிரிகள் ஆகியோர்களுக்கும் ஊர் திருவிழாவின்போது பிரச்சினை ஏற்பட்டு புகார்தாரரை திருவிழாவின்போது அடித்துவிட்டார்கள் என்றும் இந்நிலையில் 16.09.2019ம் தேதி மதியம் சுமார் 16.00 மணியளவில் 3வது எதிரி வீட்டிற்கு அருகில் புகார்தாரர் நடந்து போகும்போது 1வது எதிரி புகார்தாரரை பார்த்து என்னடா புண்டை மகனே இங்கு பார்க்குறே என்று அசிங்கமாக பேசியதற்கு புகார்தாரர் ஏண்டா திட்டுறே என கேட்டதற்கு 1 முதல் 4 எதிரிகளும் ஒன்று சேர்ந்து புகார்தாரரை தேவடியா மகனே, அவுசாரி மகனே என்று திட்டிக்கொண்டு கம்பாலும், மண்வெட்டியாலும் புகார்தாரர் தலையில் அடித்து இரத்தக்காயம் ஏற்படுத்தியபோது புகார்தாரர் அலறல் சத்தம் கேட்டு வந்த புகார்தாரரின் மாமா வேளாணியை 5 முதல் 7 எதிரிகளும் என்னடா புண்டா மகனே நீ எதுக்குடா வாரே என்று திட்டி கையால் உடம்பிலும், முதுகிலும் மாறி மாறி அடித்து கீழே தள்ளிவிட்டதில் வேளாணிக்கு இடது கண் அருகில் இரத்தக்காயம் ஏற்படுத்தியபோது சாட்சிகள் வந்து விலக்கிவிட்டு உடனே புகார்தாரரை ஜான் என்பவரின் பைக்கில் ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்துக்கொண்டும், புகார்தாரரின் மாமா சேகரும் வேளாணியும் தனியாக சேகரின் பைக்கில் புகார்தாரருக்கு

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.06.30 16:07:35 +0530

பின்னால் வந்து கொண்டிருந்தபோது வின்னர்ஸ் மெட்ரிக் பள்ளி அருகே 5 முதல் 7 எதிரிகள் மூவரும் ஓடி வந்து எங்கடா போறீங்க என்று அவர்களை வழிமறித்து கையில் வைத்திருந்த மண்வெட்டி மற்றும் கம்பால் புகார்தாரரின் மாமா சேகரின் தலையில் அடித்து இரத்தக்காயம் ஏற்படுத்திவிட்டு அவர் ஓட்டி வந்த TN 65 AH 6807 Honda Activa என்ற இருசக்கர வாகனத்தின் முகப்பு கண்ணாடியை அடித்து உடைத்து ரூ.500/- பெருமான சேதத்தை ஏற்படுத்தியும் பின்னர் அவர்கள் போகும்போது இனிமேல் எங்ககிட்டே வச்சுகிட்டே உன்னை அடித்து கொல்லாமல் விடமாட்டோம் என்று கம்பு மற்றும் மண்வெட்டியைக் காட்டி கொலை மிரட்டல் விடுத்து சென்ற குற்றம் புரிந்ததாக 1 முதல் 4 வரை உள்ள எதிரிகள் மீது 147,148,294(b),323,324 IPC ன் கீழ், 5 முதல் 7 வரை உள்ள எதிரிகள் மீது 147,148,294(b),323,341,324,427,506(ii) IPC ன் கீழ் ஆர்.எஸ்.மங்களம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. 1 முதல் 7 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் 1 முதல் 7 எதிரிகள் எதிரிகளுக்கு கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. 1 முதல் 7 எதிரிகள் எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு இருதரப்பும் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், 1 முதல் 7 எதிரிகள் முதல் நோக்கில் குற்றத்தினை செய்திருக்கலாம் என அனுமானிக்க போதிய காரணங்கள் இருந்ததால் 1 முதல் 4 வரை உள்ள எதிரிகள் மீது 147,148,294(b),323,324 IPC ன் கீழ், 5 முதல் 7 வரை உள்ள எதிரிகள் மீது 147,148,294(b),323,341,324,427,506(ii) IPC ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, படித்துக்காட்டி, விளக்கி கூறி வினவிய போது, 1 முதல் 7 எதிரிகள் எதிரிகள் குற்றசாட்டுகளை மறுத்தார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. இவ்வழக்கின் 3வது எதிரி வழக்கு விசாரணை துவங்குவதற்கு முன்பே இறந்துபோய் விட்டபடியால் 3வது எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அபேட் ஆகிவிட்ட நிலையில் இவ்வழக்கு 1, 2, 4 மற்றும் 5 முதல் 7 எதிரிகளை பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது.

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.06.30 16:07:41 +0530

5.இவ்வழக்கில் சாட்சிகள் விசாரணை துவங்குவதற்கு முன்பு புகார்தாரரும், எதிரிகளும் சேர்ந்து சமரசமாக சென்றுவிட்டதாக தெரிவித்து பிரிவு 320 Cr.P.C–ன் கீழ் மனு தாக்கல் செய்தனர், அந்த மனுவானது Crl.M.P.No.436/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு பிரிவுகள் 294(b),324 IPC குற்றங்கள் சமரசம் செய்து கொள்ள முடியாத குற்றங்கள் என்பதால் மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.

6. அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள், அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.3 சான்று பொருள்கள் குறியீடு செய்யப்பட்டு, அரசு தரப்பு சாட்சியமும், அரசு தரப்பு வழக்கறிஞரால் முடித்துக்கொள்ளப்பட்டது.

7. <u>அரசு தரப்பு வழக்கு மற்றும் சாட்சிகளின் சுருக்கம் : –</u>

இவ்வழக்கின் புகார்தாரர் வில்சன் ராபர்ட் என்பவருக்கும் அதே பெரியார் நகரைச் சேர்ந்த அருளானந்து மகன்களான 2 மற்றும் 3 எதிரிகள் ஆகியோர்களுக்கும் ஊர் திருவிழாவின்போது பிரச்சினை ஏற்பட்டு புகார்தாரரை திருவிழாவின்போது அடித்துவிட்டார்கள் என்றும் இந்நிலையில் 16.09.2019 ம் தேதி மதியம் சுமார் 16.00 மணியளவில் 3 வது எதிரி வீட்டிற்கு அருகில் புகார்தாரர் நடந்து போகும்போது 1 வது எதிரி புகார்தாரரை பார்த்து என்னடா புண்டை மகனே இங்கு பார்க்குறே என்று அசிங்கமாக பேசியதற்கு புகார்தாரர் ஏண்டா திட்டுறே என கேட்டதற்கு 1 முதல் 4 எதிரிகளும் ஒன்று சேர்ந்து புகார்தாரரை தேவடியா மகனே, அவுசாரி மகனே என்று திட்டிக்கொண்டு கம்பாலும், மண்வெட்டியாலும் புகார்தாரர் தலையில் அடித்து இரத்தக்காயம் ஏற்படுத்தியபோது புகார்தாரர் அலறல் சத்தம் கேட்டு வந்த புகார்தாரரின் மாமா வேளாணியை 5 முதல் 7 எதிரிகளும் என்னடா புண்டா மகனே நீ எதுக்குடா வாரே என்று திட்டி கையால் உடம்பிலும், முதுகிலும் மாறி மாறி அடித்து கீழே தள்ளிவிட்டதில் வேளாணிக்கு இடது கண் அருகில் இரத்தக்காயம் ஏற்படுத்தியபோது சாட்சிகள் வந்து விலக்கிவிட்டு உடனே புகார்தாரரை ஜான் என்பவரின் பைக்கில் ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்துக்கொண்டும், புகார்தாரரின் மாமா சேகரும் வேளாணியும் தனியாக சேகரின் பைக்கில் புகார்தாரருக்கு பின்னால் வந்து கொண்டிருந்தபோது வின்னர்ஸ் மெட்ரிக் பள்ளி அருகே 5 முதல் 7

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.06.30 16:07:46 +0530

எதிரிகள் மூவரும் ஓடி வந்து எங்கடா போறீங்க என்று அவர்களை வழிமறித்து கையில் வைத்திருந்த மண்வெட்டி மற்றும் கம்பால் புகார்தாரரின் மாமா சேகரின் தலையில் அடித்து இரத்தக்காயம் ஏற்படுத்திவிட்டு அவர் ஒட்டி வந்த TN 65 AH 6807 Honda Activa என்ற இருசக்கர வாகனத்தின் முகப்பு கண்ணாடியை அடித்து உடைத்து ரூ.500/- பெருமான சேதத்தை ஏற்படுத்தியும் பின்னர் அவர்கள் போகும்போது இனிமேல் எங்ககிட்டே வச்சுகிட்டே உன்னை அடித்து கொல்லாமல் விடமாட்டோம் என்று கம்பு மற்றும் மண்வெட்டியைக் காட்டி கொலை மிரட்டல் விடுத்து சென்றுள்ளார்கள்.

7(2) அ.சா.1 தனது சாட்சியத்தில் கடந்த 14.09.2019 ம் தேதி மாலை 4.00 மணியளவில் தான் நேசசெல்வன் என்பவரது வீட்டின் முன்பு அ.சா.2,அ.சா.3 ஆகியோரிடம் பேசிகொண்டிருக்கையில் அவ்வழியாக கூட்டமாக சிலர் சத்தம்போட்டு வந்தார்கள் என்றும் தான் என்னவென்று பார்க்க சென்றபோது கூட்டத்தில் இருந்த சில நபர்கள் தன்னை கீழே தள்ளிவிட்டதில் தனக்கும் அ.சா,2, அ.சா.3 ஆகியோருக்கும் காயம் ஏற்பட்டது என்றும் தான் எழுந்து பார்த்தபோது சற்று தூரத்தில் எதிரிகள் இருந்ததால் தான் திருவாடானை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது சந்தேகத்தின் பேரில் போலிசாரிடம் எதிரிகள் மீது புகார் வாக்குமூலம் அளித்ததாகவும் புகார் வாக்குமூலத்தில் இடம்பெற்றுள்ள அ.சா,.ஆ.1 கையொப்பம் தன்னுடையது தான் என சாட்சியம் அளித்துள்ளார்.

7(3) அ.சா.2 தனது சாட்சியத்தில் கடந்த 14.09.2019 ம் தேதி மாலை 4.00 மணியளவில் தான் நேசசெல்வன் என்பவரது வீட்டின் முன்பு அ.சா.1, அ.சா.3 ஆகியோரிடம் பேசிகொண்டிருக்கையில் அவ்வழியாக கூட்டமாக சிலர் சத்தம்போட்டு வந்தார்கள் என்றும் தான் என்னவென்று பார்க்கசென்றபோது கூட்டத்தில் இருந்த சில நபர்கள் தன்னை கீழேதள்ளிவிட்டதில் தனக்கும் அ.சா,1, அ.சா.3 ஆகியோருக்கும் காயம் ஏற்பட்டது என்றும் அதற்கு தான் ராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும் சந்தேகத்தின்பேரில் அ.சா.1 போலிசாரிடம் எதிரிகள் மீது புகார் வாக்குமூலம் அளித்த விவரம் தனக்கு தெரியும் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7(4) அ.சா.3 தனது சாட்சியத்தில் கடந்த 14.09.2019 ம் தேதி மாலை 3.30 மணியளவில் தான் நேசசெல்வன் என்பவரது வீட்டின் முன்பு அ.சா.1, அ.சா.2 ஆகியோரிடம்

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.30 16:07:52 +0530

பேசிகொண்டிருக்கையில் அவ்வழியாக கூட்டமாக சிலர் சத்தம்போட்டு வந்தார்கள் என்றும் தான்என்னவென்று பார்க்கசென்றபோது கூட்டத்தில் இருந்த சில நபர்கள் தன்னை கீழேதள்ளிவிட்டதில் தனக்கும் அ.சா,1, அ.சா.2 ஆகியோருக்கும் காயம் ஏற்பட்டது என்றும் அதற்கு தான் ராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும் சந்தேகத்தின்பேரில் அ.சா.1 போலிசாரிடம் எதிரிகள் மீது புகார் வாக்குமூலம் அளித்த விவரம தனக்கு தெரியும் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7(5) அ.சா.4 தனது சாட்சியத்தில் கடந்த 17.09.2019 ம் தேதி சார்பு ஆய்வாளர் சதிஷ்குமார் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது திருவாடானை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற தகவலை பெற்று மருத்துவமனை சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த வின்சன்ட்ராபர்ட் என்பவரை விசாரணை செய்து அவர்கொடுத்த அ.சா.ஆ.2 புகார் வாக்கமூலத்தை பெற்று நிலையம் ஆஜராகி புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலையை குற்றஎண். 168/19 u/s 147,148,294(b),323,324, 341,427,506(ii) IPC யாக வழக்கு பதிவுசெய்து அ.சா.ஆ.3 முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

7(6).பின்னர் வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் நாசர் அவர்கள் அவரது விசாரணைக்கு எடுத்து கொண்டு அதே நாள் 9.00 மணியளவில் சம்பவயிடம் சென்று சாட்சிகள் பிரசாத், அந்தோணி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வைமகசர், அ.சா,ஆ.5 மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார். சம்பவயிடத்திலிருநது அதே சாட்சிகள் முன்னிலையில் வழக்கு சொத்துகளான மண்வெட்டி, கருவே கம்பு, களைகொட்டு ஆகியவற்றை அ.சா,ஆ.6 அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியுள்ளார்.

7(7) பின்னர் வழக்கின் சாட்சிகளான வின்சன்ட் ராபர்ட், வேலானி, ராணி,எலிசத்மேரி, மற்றும் பார்மைகசர் சாட்சிகளை தனிதனியே விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவுசெய்துள்ளார். அவர்கள் விசாரணையிலும் சாட்சிகளை விசாரணை செய்ததிலும் குற்றசம்பவம் உண்மையனெ தெரியவந்து வழக்கில் ஈடுபட்ட எதிரிகளை தேடிவந்த நிலையில் 17.09.2019 ம்தேதி 1330 மணியளவில் பெரியார் நகர் ஊருக்கு அருகே உள்ள

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.06.30 16:08:02 +0530

கருவேல காட்டின் அருகே அருகே இவ்வழக்கின் எதிரிகளான சுதாகர், ஆரோக்கியசெல்வம், நேசசெல்வம், ஜேசுதுரை ஆகியோரை கைது செய்வதற்கான தக்க காரணம்கூறி அனைத்து சட்டபடியான நடவடிக்கைகளை மேற்கொண்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் கோமதி என்பவர் தனது விசாரணைக்கு எடுத்துகொண்டு காவல் ஆய்வாளர் நாசர் அவர்கள் விசாரணைசெய்த அனைத்து சாட்சிகளையும் விசாரணை செய்து அவரிடம் கூறியதைபோலவே சாட்சியம் அளித்ததால் அவர்தனியாக வாக்குமூலங்கள் பதிவுசெய்யவில்லை. வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகள் அ.சா.பொ.1 மண்வெட்டி, அ.சா.பொ. 2 கருவே கம்பு, அ.சா.பொ.3 களைகொட்டு ஆகியவற்றை அ.சா.ஆ. 7 படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைப்பு செய்துள்ளார்.

7(8).பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட வின்சன்ட்ராபர்ட் மற்றும் வேலாணி ஆகியோருக்கு சிகிச்சை அளித்த திருவாடானை அரசு மருத்துவமனை மருத்துவர் கோகுல் அவர்களை விசாரித்து அவரிடமிருந்து காயம்பட்ட நபர்களான வின்சன்ட்ராபர்ட் என்பவரின் அ.சா.ஆ.8 விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் வேலானி என்பவரின் அ.சா.ஆ.9 விபத்து பதிவேட்டு அறிக்கை பெற்று பெற்று அவரது வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார், இவ்வழக்கில் காயம்பட்ட சேகர் என்பவருக்கு சிகிச்சை அளித்த ராமநாதபுரம் அரசு மருத்துவமனை மருத்துவர் விமல் என்பவரை விசாரணைசெய்து அவரிடமிருந்து காயம்பட்ட நபரான சேகர் என்பவரின் அ.சா.ஆ.10 விபத்து பதிவேட்டு அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார்.

7(9). சார்பு ஆய்வாளர் சதிஷ்குமார் மற்றும் சாட்சி ஜான் ஆகியோர்களை தனி தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட மற்ற எதிரிகள் அனைவரும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் முன்பிணையில் சென்றதாக தெரியவந்துள்ளது. பின்னர் அவரது விசாரணையை முடித்து கொண்டு எதிரிகள் மீது u/s 147,148,294(b),323,324, 341,427,506(ii) IPC கீழ் ஆர்எஸ் மங்கல காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.30 16:08:08 +0530

8. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களில் இருந்து 1, 2, 4 மற்றும் 5 முதல் 7 எதிரிகளுக்கு பாதமகமாக உள்ள சங்கதிகள் குறித்து 1, 2, 4 மற்றும் 5 முதல் 7 எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)ன் கீழ் படித்துக் காட்டி விளக்கிக்கூறி வினவிய போது 1, 2, 4 மற்றும் 5 முதல் 7 எதிரிகள் அரசு தரப்பு சாட்சிகள் சொல்வது பொய்யென்றும், அரசு தரப்பு வழக்கு பொய் வழக்கென்றும் 1, 2, 4 மற்றும் 5 முதல் 7 எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என தெரிவித்தார்கள். இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது.

9. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் 1, 2, 4 எதிரிகள் மீது 147,148,294(b),323,324 IPC ன் கீழ், 5 முதல் 7 வரை உள்ள எதிரிகள் மீது 147,148,294(b),323,341,324,427,506(ii) IPC ன் இந்திய தண்டனை சட்டத்தின் கீழ், சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும் ?

**தீர்வு**

10. இவ்வழக்கின் புகார்தாரர் வில்சன் ராபர்ட் என்பவருக்கும் அதே பெரியார் நகரைச் சேர்ந்த அருளானந்து மகன்களான 2 மற்றும் 3 எதிரிகள் ஆகியோர்களுக்கும் ஊர் திருவிழாவின்போது பிரச்சினை ஏற்பட்டு புகார்தாரரை திருவிழாவின்போது அடித்துவிட்டார்கள் என்றும் இந்நிலையில் 16.09.2019 ம் தேதி மதியம் சுமார் 16.00 மணியளவில் 3 வது எதிரி வீட்டிற்கு அருகில் புகார்தாரர் நடந்து போகும்போது 1 வது எதிரி புகார்தாரரை பார்த்து என்னடா புண்டை மகனே இங்கு பார்க்குறே என்று அசிங்கமாக பேசியதற்கு புகார்தாரர் ஏண்டா திட்டுறே என கேட்டதற்கு 1 முதல் 4 எதிரிகளும் ஒன்று சேர்ந்து புகார்தாரரை தேவடியா மகனே, அவுசாரி மகனே என்று திட்டிக்கொண்டு கம்பாலும், மண்வெட்டியாலும் புகார்தாரர் தலையில் அடித்து இரத்தக்காயம் ஏற்படுத்தியபோது புகார்தாரர் அலறல் சத்தம் கேட்டு வந்த புகார்தாரரின் மாமா வேளாணியை 5 முதல் 7 எதிரிகளும் என்னடா புண்டா மகனே நீ எதுக்குடா வாரே என்று திட்டி கையால் உடம்பிலும், முதுகிலும் மாறி மாறி அடித்து கீழே தள்ளிவிட்டதில் வேளாணிக்கு இடது கண் அருகில் இரத்தக்காயம் ஏற்படுத்தியபோது சாட்சிகள் வந்து விலக்கிவிட்டு உடனே புகார்தாரரை ஜான் என்பவரின் பைக்கில் ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்துக்கொண்டும், புகார்தாரரின் மாமா சேகரும் வேளாணியும் தனியாக சேகரின் பைக்கில் புகார்தாரருக்கு

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.06.30 16:08:12 +0530

பின்னால் வந்து கொண்டிருந்தபோது வின்னர்ஸ் மெட்ரிக் பள்ளி அருகே 5 முதல் 7 எதிரிகள் மூவரும் ஓடி வந்து எங்கடா போறீங்க என்று அவர்களை வழிமறித்து கையில் வைத்திருந்த மண்வெட்டி மற்றும் கம்பால் புகார்தாரரின் மாமா சேகரின் தலையில் அடித்து இரத்தக்காயம் ஏற்படுத்திவிட்டு அவர் ஓட்டி வந்த TN 65 AH 6807 Honda Activa என்ற இருசக்கர வாகனத்தின் முகப்பு கண்ணாடியை அடித்து உடைத்து ரூ.500/– பெருமான சேதத்தை ஏற்படுத்தியும் பின்னர் அவர்கள் போகும்போது இனிமேல் எங்ககிட்டே வச்சுகிட்டே உன்னை அடித்து கொல்லாமல் விடமாட்டோம் என்று கம்பு மற்றும் மண்வெட்டியைக் காட்டி கொலை மிரட்டல் விடுத்து சென்ற குற்றம் புரிந்ததாக அரசு தரப்பில் சொல்லப்பட்ட நிலையில், இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் காயம்பட்ட நபரான அ.சா.1 சந்கேத்தின் பேரில் தான் திருவாடானை அரசு மருத்துவமனையில் இருந்தபோது எதிரிகள் மீது புகார் அளித்ததாகவும் புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்தது என்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ்சாட்சியாகியிருப்பது அரசு தரப்பு வழக்கை முழுமையாக பாதிக்கக்கூடியதாக இருக்கிறது.

11.மேலும், இவ்வழக்கில் காயம்பட்ட மற்ற நபர்களான அ.சா.2, அ.சா.3 ஆகியோர்களும் புகார்தாரரான அ.சா.1 யை ஒத்துரைத்து சந்தேகத்தின்பேரில் எதிரிகள் மீது அ.சா.1 புகார் அளித்துவிட்டதாக சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ்சாட்சியாகியிருப்பது அரசு தரப்பு வழக்கிற்கு எவ்வகையிலும் உதவக்கூடியதாக அமையவில்லை.

12. மேலும் அ.சா.1, அ.சா.2, அ.சா.3, ஆகியோர்கள் அரசு தரப்பில் பிறழ்சாட்சிகளாகிவிட்ட போதிலும், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் மற்றும் பல்வேறு மாண்புமிகு உயர்நீதிமன்றங்கள் பிறழ்சாட்சிகளின் சாட்சியங்கள் ஏதேனும் வழக்கிற்கு உதவக்கூடியதாக இருந்தால் அதனை கருத்தில் எடுத்துக்கொள்ளலாம் என பல்வேறு தீர்ப்புகளின் மூலம் தெரிவித்துள்ளது, ஆனால் இவ்வழக்கில் பிறழ்சாட்சிகாளகியுள்ள அ.சா.1, அ.சா.2, அ.சா.3, ஆகியோர்களின் சாட்சியங்களை பரிசீலிக்கும்போது அதில் வழக்கிற்கு உதவக்கூடிய வகையில் எந்த சாட்சியமும் அமையாததால் அவை அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் பாதகமாக அமைந்துள்ளது.

13. மேலும் இவ்வழக்கின் புகார்மனுவை பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சாட்சிகளை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, புலன் விசாரணை முடித்து, 1, 2, 4

மற்றும் 5 முதல் 7 எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த விவரம் குறித்து அ.சா.4 சாட்சியம் அளித்துள்ள போதிலும், 1, 2, 4 மற்றும் 5 முதல் 7 எதிரிகளின் குற்றச்செயல்களை இணைக்கக்கூடிய வகையில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் ஏதும் அமையாத நிலையில், அரசு தரப்பில் சொல்லப்பட்டது போல மேற்படி குற்றச் சம்பவம் நடைபெற்றதா என எழும் சந்தேகத்தின் பலனை 1, 2, 4 மற்றும் 5 முதல் 7 எதிரிகளுக்கு சாதகமாக்கிட இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

14. எனவே இறுதியாக 3 வது எதிரி இவ்வழக்கு விசாரணை துவங்குவதற்கு முன்பே இறந்துபோய் விட்டபடியால் அவர் மீதான குற்றச்சாட்டுகள் அபேட் ஆகிவிட்டது. 1, 2, 4 எதிரிகள் 147,148,294(b),323,324 IPC ன் கீழ், 5 முதல் 7 வரை உள்ள எதிரிகள் 147,148,294(b),323,341,324,427,506(ii) IPC கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, மேற்படி பிரிவுகளிலிருந்து 1, 2, 4 மற்றும் 5 முதல் 7 எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1,2,4 மற்றும் 5 முதல் 7 வரை உள்ள எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணையமுறி ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

15.இவ்வழக்கில் P.R.56/2020 ல் கட்டுப்பட்டுள்ளதும், அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ. 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதுமான வழக்கு சொத்துகளான

Item No. I) மண்வெட்டி கனை சுமார் 59 சென்டி மீட்டர் உடன் கூடிய 18 சென்டி மீட்டர் நீளம் உள்ள மண்வெட்டியுடன் 19 சென்டி மீட்டர் சுற்றளவு கொண்ட இரும்பு பூனுடன் கூடிய மண்வெட்டி ஒன்று ,

Item No. II) சுமார் 81 சென்டி மீட்டர் நீளம் உள்ள கருவேல்கம்பு ஒன்று,

Item No. III) களைகொட்டு சுமார் 14 சென்டி மீட்டர் நீளமும், களைகொட்டு கனை சுமார் 51 சென்டி மீட்டர் உடன் கூடிய களைகொட்டு ஒன்று.

மேற்கண்ட வழக்கு சொத்துகள் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் உரிய வழிமுறைகளை பின்பற்றி அழித்தல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

ANTONY RISHAN DEV

Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.30 16:08:34 +0530

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்ல அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் நேரடியாக அதை கணினியில் வைத்து சரிபார்க்கப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு ஜுன் மாதம் 30ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.06.30 16:08:38 +0530

நீதித்துறை நடுவர்,
திருவாடானை.

அரசு தரப்பு சாட்சிகள் :–

1. அ.சா.1 திரு.வில்சன் ராபர்ட்
2. அ.சா.2 திரு.வேலாணி
3. அ.சா.3 திரு.சேகர்
4. அ.சா.4 திரு.ரவிச்சந்திரன் (சிறப்பு சார்பு ஆய்வாளர்)

அரசு தரப்பு சான்றாவணங்கள் :–

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 17.09.2019 | புகார்மனுவில் உள்ள அ.சா.1ன் கையெழுத்து. |
| 2. | அ.சா.ஆ.2 | 17.09.2019 | புகார்மனு |
| 3. | அ.சா.ஆ.3 | 17.09.2019 | முதல் தகவல் அறிக்கை |
| 4. | அ.சா.ஆ.4 | 17.09.2019 | பார்வை மகஜர் |
| 5. | அ.சா.ஆ.5 | 17.09.2019 | மாதிரி வரைபடம் |
| 6 | அ.சா.ஆ.6 | 17.09.2019 | அத்தாட்சி |
| 7 | அ.சா.ஆ.7 | 17.09.2019 | படிவம் 91 |
| 8. | அ.சா.ஆ.8 | 16.09.2019 | அ.சா.1ன் விபத்து பதிவேட்டு அறிக்கை |
| 9. | அ.சா.ஆ.9 | 16.09.2019 | அ.சா.2ன் விபத்து பதிவேட்டு அறிக்கை |
| 10. | அ.சா.ஆ.10 | 16.09.2019 | அ.சா.3ன் விபத்து பதிவேட்டு அறிக்கை |

அரசு தரப்பு சான்று பொருட்கள் :–

1. அ.சா.பொ.1 மண்வெட்டி கனை சுமார் 59 சென்டி மீட்டர் உடன் கூடிய 18 சென்டி மீட்டர் நீளம் உள்ள மண்வெட்டியுடன் 19 சென்டி மீட்டர் சுற்றளவு கொண்ட இரும்பு பூனுடன் கூடிய மண்வெட்டி ஒன்று ,
2. அ.சா.பொ.2 சுமார் 81 சென்டி மீட்டர் நீளம் உள்ள கருவேல்கம்பு ஒன்று,

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.06.30 16:08:42 +0530

3. அ.சா.பொ.3 களைகொட்டு சுமார் 14 சென்டி மீட்டர் நீளமும், களைகொட்டு கனை சுமார் 51 சென்டி மீட்டர் உடன் கூடிய களைகொட்டு

1,2,4 மற்றும் 5 முதல் 7 எதிரிகள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் சான்று பொருட்கள்:-

--இல்லை--

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.30 16:08:47 +0530

நீதித்துறை நடுவர்,
திருவாடானை.

குறிப்பு :-

1. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாரணையின் போது 1,2, 4, 5 முதல் 7 எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
3. எந்த ஒரு சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.